## தேசிய சேமிப்பு வங்கி - 2013

தேசிய சேமிப்பு வங்கியினதும் (வங்கி) வங்கி மற்றும் அதன் துணைக்கம்பனியினதும் (தொகுதி) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. வங்கியின் 15 கிளைகளின் கணக்காய்விற்கு 15 பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனங்களினால் உதவி பெறப்பட்டது. துணைக்கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் துணைக்கம்பனிகளின் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனங்களால் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2014 ஒக்தோபர் 09 இல் தேசிய சேமிப்பு வங்கியின் தலைவிக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம் - வங்கி

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக வங்கியின் நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் அதன் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### அபிப்பிராயம் - தொகுதி

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியினதும் அதன் துணைக்கம்பனியினதும் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலையும் அதன் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 தொகுதி நிதிக்கூற்றுக்கள்

வங்கியின் முழுமையாக உடமையாக்கப்பட்ட துணைநிலை கம்பனியாகவுள்ள வரையறுத்த தேசிய சேமிப்பு வங்கி நிதிய முகாமைத்துவக் கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் திரண்ட நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பதற்காக எடுக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்பாடற்ற கணக்குகளில் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறவேண்டிய ரூபா 659,014,723 தொகையில், ரூபா 281,079,089 தொகை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மோசடியான மீளெடுப்புகள் ரூபா 23,193,414 தொகையாகும், அதில் ரூபா 12,435,981 தொகை ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

(இ) மொத்த நிலுவையாக இருந்தவற்றின் 42 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 3,583,416 தொகையான வாடிக்கையாளர்களிற்கு மீளளிக்க வேண்டிய கேள்வி வைப்புக்கள் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக மீளளிக்கப்படாமல் இருந்தது.

(ஈ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசாளருடைய குறைவு ரூபா 1,645,074 ஆக இருந்தது. அதில் ரூபா 1,561,972 தொகை ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

(உ) ரூபா 2,699,061 ஆன மீதி தீர்க்கப்படாமல் ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக வைப்பு தெளிவுபடுத்தல் கணக்குகளில் காணப்பட்டது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி அதிகாரச்சட்டத்தின் 47 ஆம் பிரிவு | கணக்கொன்று வழமையில் செயலற்றிருத்தல் அத்தகைய கணக்கில் இருந்த பணம் ''கோரப்படாத வைப்புக்கள் ஒதுக்கத்திற்கு'' மாற்றப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், வங்கி இந்த ஏற்பாடுடன் இணங்கியிருக்கவில்லை. |
| (ஆ) 2000 இன் 38 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் மற்றும் 2000 சனவரி மாதத்தின் பிஎவ்/பிஈ/06 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | வங்கியானது உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து கழிக்கப்படாமல் அதன் சொந்த நிதிகளில் 2013 ஆம் ஆண்டிற்கான உழைக்கும் போதே செலுத்தும் வரியாக ரூபா 63,498,213 தொகையை செலுத்தியிருந்தது. |
| (இ) 2007 இன் 10 இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்ட 2006 இன் 10 இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | (i) 82 சந்தர்பங்களில் விண்ணப்பங்களுடன் வரி கழித்தல் கூற்றுக்கள் கணக்குகள் திறக்கும் நேரத்தில் 6 கிளைகளால் வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.<br>(ii) நான்கு வாடிக்கையாளர்கள் அவர்களுடைய மதிப்பிடக்கூடிய வருமானம் ரூபா 500,000 ஐ விஞ்சியிருக்கவில்லை என்று அவர்களுடைய மதிப்பிடக்கூடிய வருமானத்துடன் வரி கழித்தல் கூற்றை சமர்ப்பித்திருந்தது. இருந்த போதிலும், அவர்களுடைய வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட மொத்த வட்டி வருமானம் அத்தகைய தொகையை விஞ்சியிருந்ததுடன் இது ரூபா 2,868,363 ஆக இருந்தது. |
| (ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் | நிதி ஆண்டு தொடங்குவதற்கு மூன்று மாதங்களிற்கு முன்னர் பணிப்பாளர் |

| | | |
|---|---|---|
| | சுற்றறிக்கையின் 5 ஆம் அத்தியாயத்தின் 5.2.4 ஆம் பந்தி | சபையின் அங்கீகாரத்துடன் வரைவு பாதீடொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். வங்கியானது கடந்த ஐந்து ஆண்டுகளிற்கான வருடாந்த பாதீடுகளிற்கு பணிப்பளார் சபையின் அங்கீகாரம் பெறப்படுகின்ற போது இந்த சுற்றறிக்கை அறிவுறுத்தலுடன் இணங்கியிருக்கவில்லை. |
| (உ) | 2006 ஒக்தோபர் 5 ஆந் திகதிய 6 ஆம் இலக்க சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட 2006 சனவரி 25 ஆந் திகதிய 8 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவராண்மையின் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் | |
| | (i) வழிகாட்டல். 4:2:1 | 2013 ஆம் ஆண்டிற்கான பிரதான கொள்வனவு திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. |
| | (ii) வழிகாட்டல் 4:2:2 | 2013 ஆம் ஆண்டிற்கான பிரதான கொள்வனவு காலப் பட்டியல் வேண்டப்பட்டவாறு தயாரிக்கப் பட்டிருக்கவில்லை |
| | (iii) வழிகாட்டல் 8.9.3 | ரூபா 500,000 ஐ விஞ்சிய ஒப்பந்த பெறுமதி தொடர்பில் ஒப்பந்தகாரருடக் முறையான ஒப்பந்த உடன்படிக்கை கைசாத்திடப் பட்டிருக்க வேண்டும். இருந்த போதிலும் இந்த வேண்டுகை ரூபா 124,029,624 பெறுமதியான பொருட்களின் கொள்வனவிற்கான 06 சந்தர்ப்பங்களில் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட வங்கியினுடைய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது வங்கியின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிலுள்ள ரூபா 6,340 மில்லியன் நேரொத்த வரிக்கு முந்திய தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 2,279 வரிக்கு முந்திய தேறிய இலாபத்தில் விளைந்திருந்தது. ஆதலால், நிதிசார் விளைவுகளில் ரூபா 4,061 மில்லியன்

அல்து 64 சதவீதம் வீழ்ச்சியொன்றைக் காட்டுகின்றது. வட்டி வருமானத்தை விட வட்டிச் செலவினம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமை நிதிசார் விளைவுகளின் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டின் போது வங்கியினுடைய துணைக் கம்பனிகளின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டில் ரூபா 52 மில்லியன் நேரொத்த வரிக்கு முந்திய தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 390 மில்லியன் வரிக்கு முந்திய தேறிய இலாபத்தில் விளைந்திருந்தது, ஆதலால் நிதிசார் விளைவுகளில் ரூபா 338 மில்லியன் அதிகரிப்பொன்றைக் காட்டுகின்றது.

## 3.2. பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்ட சில முக்கியமான வங்கி கணக்கீட்டு விகிதங்களை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| | துறை விகிதம் | 2013 | 2012 |
|---|---|---|---|
| (அ) இலாபத்தன்மை விகிதம் | | | |
| (i) சராசரி பங்குடைமையாளர் நிதிகள் (உரிமை) மீதான பெறுகைகள் (%) | 9.5 | 5.15 | 16.07 |
| (ii) சராசரி சொத்துக்கள் மீதான பெறுகைகள் (%) | 0.9 | 0.39 | 1.30 |
| (iii) தேறிய வட்டி எல்லை | 1.43 | 1.7 | 2.7 |
| (ஆ) போதிய மூலதன விகிதம் | | | |
| மொத்த சொத்துக்களிற்கு உரிமை மூலதனம் | 1:18.83 | 1:29.45 | 1:21.41 |
| (இ) திரவச் சொத்து விகிதம் | | | |
| திரவ விகிதம் (%) | 69.53 | 92.7 | 69.5 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

உரிமை மூலதம் மீதான பெறுகைகள், சராசரி சொத்துக்கள் மீதான பெறுகைகள் தேறிய வட்டி எல்லை என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் முறையே 67.95 சதவீதம், 70 சதவீதம் மற்றும் 37.04 வீதத்தால் குறைவடைந்திருந்தது அதேநேரம் திரவ விகிதம் 33.38 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. வங்கியின் செயலாற்றல்

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் போது வங்கியின் செயற்பாடுகளின் செயலாற்றல் கீழே தரப்படுகின்றன.

| | 2013 | 2012 |
|---|---|---|
| கிளைகளின் எண்ணிக்கை | 229 | 219 |
| தபாலக கிளைகளின் எண்ணிக்கை | 4,063 | 4,053 |
| கணக்கு வைத்திருப்போரின் எண்ணிக்கை (மில்) | 17.9 | 17.4 |
| ஏரீஎம் களின் எண்ணிக்கை | 247 | 231 |
| பாடசாலை வங்கிப் பிரிவுகள் | 1,723 | 1,185 |

மீளாய்வாண்டின் போது பத்துக் கிளைகள் புதிதாக தாபிக்கப்பட்டிருந்ததுடன் கணக்கு வைத்திருப்போரின் எண்ணிக்கை ஏறத்தாழ 500,000 அதிகரித்திருந்ததுடன் ஏரீஎம் வலையமைப்புக்கள் மீளாய்வாண்டின் போது 231 முதல் 247 வரை அதிகரித்திருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்கான இலாபமும் நட்டத்தில் இயங்குகின்ற கிளைகள்

(i) 2013 ஆம் ஆண்டிற்கான வங்கியின் வரிக்குப் பிந்திய இலாபம் ரூபா 1,184 மில்லியனாக இருந்தது. 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 69 சதவீதம் அல்லது ரூபா 2,579 மில்லியன் குறிப்பிடத்தக்களவு குறைவாக இருந்தது.

(ii) முப்பத்திமூன்று கிளைகள் மற்றும் 2 பிரிவுகள் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 207,872,445 மற்றும் ரூபா 148,024,445 ஆன நட்டங்களில் தொடர்ந்தும் இயங்குகின்றன.

(iii) 2013 ஆம் ஆண்டின் போது 43 கிளைகள் மற்றும் 02 பிரிவுகளில் ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 209,563,299 ஆக இருந்தது.

### 4.2. சர்வதேச பிணைமுறி வழங்கல்- 2013

2012 திசெம்பர் 19 ஆந் திகதிய 12/1767/504/163 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் தொகையான சர்வதேச பிணைமுறியை வழங்குவதற்கு அமைச்சரவை அதன் அங்கீகாரத்தை வழங்கியிருந்ததுடன் உட்கட்டமைப்பு

செயற்திட்டங்ககளிற்காக கடன் வழங்குகின்ற செற்பாடுகளிற்கு இது பயன்படுத்தப்பட்டது. இதன்படி, வங்கியானது 2013 செப்தெம்பர் 18 இல் வருட்ாந்தம் 8.875 சதவீத வட்டி வீதத்தில் ஐ.அ.டொலர் 750 மில்லியன் பெறுமதியான பிணைமுறையை வழங்கியிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அமைச்சரவை தீர்மானம் மற்றும் வங்கியின் வழங்குகின்ற ஞாபங்கள் என்பவற்றின் பிரகாரம்,இலங்கை அபிவிருத்தி பிணைமுறிகளில் செயற்படுத்தப்பட்ட ஐ.அ.டொலர் பெயரிடப்பட்ட கடனில் 25 சதவீதம் மற்றும் இலங்கை ரூபா பெயரிடப்பட்ட கடன்களில் 25 சதவீதம் என பிணைமுறிகளில் 50 சதவீதம் முதலீடு செய்வதற்கு நெறிப்படுத்தப்பட்டிருந்தது, இலங்கை அபிவிருத்தி பிணைமுறிகளில் பெறப்பட்ட 50 சதவீதம் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் பெயரிடப்பட்ட கடன்களில் ஐ.அ.டொலர் 15.5 மில்லியன் அல்லது 8.3 சதவீதம் மாத்திரம் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) மேலும் வங்கியானது 2013 திசெம்பர் 31 அளவில் இலங்கை ரூபா பெயரிடப்பட்ட கடன்களிற்காக பெறப்பட்ட பிணைமுறியின் எந்தவொரு தொகையும் பணவளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.3. நிர்மாண வேலைகளிலுள்ள தாமதங்கள்

ரூபா 144,509,414 பெறுமதியான பாணந்துறை, பம்பலபிட்டிய மற்றும் நீர்கொழும்பில் உள்ள காணி வங்கி கிளைகளின் நிர்மாணிப்பிற்காக 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிர்மாண வேலைகள் 2013 திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலால், அந்த வங்கி கிளைகள் செயற்படுத்தும் நோக்கில் வாடகையில் பெறப்பட்ட கட்டிடங்களிற்காக ரூபா 27,405,300 தொகையான வாடகை செலுத்தப்பட்டிருந்தது. குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்குமாயின் இந்த வாடகை கொடுப்பனவை சேமித்திருக்க முடியும்.

### 4.4 கடன் நிர்வாகம்

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு 2013 ஆம் ஆண்டின் போது வங்கியின் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் செயற்பாடற்ற கடன்கள் வீழ்ச்சி என்பவற்றின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| கடன் வகை | 2013 | | | | 2012 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த கடன்கள் | | செயற்பாடற்ற கடன்கள் | | மொத்த கடன்கள் | | செயற்பாடற்ற கடன்கள் | |
| | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை |
| | | ரூபா மில் | | ரூபா மில் | | ரூபா மி.ல் | | ரூபா மில் |
| அலங்கார கடன்கள் | 83 | 66.3 | 6 | 4.22 | 80 | 60.67 | 7 | 6.33 |
| ஓட்டோ கடன்கள் | 297 | 301.56 | 2 | 1.07 | 143 | 143.63 | 2 | 2.47 |
| வர்த்தக கடன்கள் | 2 | 1,192.96 | - | - | 1 | 725.95 | - | - |
| வெளிநாட்டு கடன்கள் | 233 | 387.02 | 61 | 111.34 | 207 | 392.35 | 43 | 85.58 |
| அரசாங்க கடன்கள் | 31,133 | 21,112.56 | 1,462 | 813.89 | 24,885 | 17,123.26 | 664 | 395.34 |
| வீடமைப்பு மற்றும் ஆதனக் கடன்கள் | 31,034 | 22,962.48 | 4,116 | 2,172.77 | 31,077 | 22,250.85 | 3,643 | 1,995 |
| வீடமைப்பு மற்றும் ஆதனக் கடன்கள் - மஹிந்த | 4 | 3.99 | 3 | 1.8 | 19 | 17.21 | 7 | 7.17 |
| தேசிய வீடமைப்பு அபிவிருத்தி –ஜன செவன | 5 | 2,476.00 | - | - | 4 | 1,458.43 | - | - |
| உத்தரவாதங்கள் மீதான தனிப்பட்ட கடன்கள் | 30,488 | 5,440.63 | 1,770 | 175.1 | 18,630 | 3,127.13 | 1,199 | 83.99 |
| ஈட்டுக்கள் மீதான தனிப்பட்ட கடன்கள் | 183 | 154.37 | 34 | 37.39 | 210 | 178.56 | 40 | 35.10 |
| செயற்திட்ட கடன்கள் | 21 | 15,872.53 | - | - | 12 | 7,664.22 | - | - |
| பதவியணியினர் | 10,133 | 3,232.94 | - | - | 10,015 | 3,012.86 | - | - |
| பல்கலைக்கழக | | | | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| உத்தியோகத்தர் கடன்கள் | 191 | 174.49 | 78 | 6.55 | 63 | 51.75 | 1 | 1.00 |
| நாட்டின் எஞ்சிய கடன்கள் | 574 | 33.32 | 427 | 20.57 | 638 | 29.30 | 482 | 18.70 |
| **மொத்தம்** | **104,381** | **73,411.15** | **7,959** | **3,344.72** | **85,984** | **56,236.19** | **6,088** | **2,630.68** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

செயற்பாடற்ற கடன்களின் மொத்தப் பெறுமதி 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே 4.7 சதவீதம் மற்றும் 4.5 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(ஆ) அறவிடப்படாத உத்தியோகத்தர் கடன்கள்

i. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறும் காலத்தில் அறவிடப்படாது இருந்த அறவிடவேண்டிய கடன்களின் பெறுமதி ரூபா 11,859,246 ஆகும்.

ii 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 69 இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பதவி வறிதாக்கப்பட்டோர் என்போரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 6,746,567 தொகை 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்றில் காட்டப்பட்ட ஊழியருடைய கடன்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) வீடமைப்பு திட்மொன்று நிர்மாணிப்பதற்கு வழங்கப்பட்ட செயற்திட்ட கடன்கள்

1996 ஆம் ஆண்டின் பொது மேற்குறிப்பிட்ட நோக்கத்திற்காக 20 சதவீத வட்டி வீதத்தில் தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா 50 மில்லியன் மற்றும் ரூபா 30 மில்லியன் தொகையான இரண்டு கடன்கள் வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கடன் 1999 யூலை அளவில் முழுமையாக தீர்க்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) முழுக் கடனும் எந்தவொரு தவணைப்பணமும் செலுத்தப்படால் இருந்தது.

(ii) 2004 நவம்பர் 06 இல் உள்ளவாறு மேற்குறிப்பிட கடன் தொடர்பில் வங்கிக்கு செலுத்தப்பட்ட வட்டி முறையே ரூபா 8,524,520 மற்றும் ரூபா 1,546,028 மாத்திரமேயாகும்.

(iii) 2006 மார்ச் 10 ஆந் திகதிய சபைத் தீர்மானத்தின் பிரகாரம், அந்த கடன்கள் சார்பில் சுவீகரிக்கப்பட்ட ஆதனத்தின் பரப்பளவு 6 ஏக்கர், 3 றூட் மற்றும் 21.75 பேர்ச் ஆக இருந்தது. உரிய மதிப்பீட்டு அறிக்கை மற்றும் நிலஅளவை திட்டத்தின் பிரகாரம், ஆதனத்தின் பரப்பளவு 6 ஏக்கர், 2 றூட் மற்றும் 12.8 பேர்ச் மாத்திரமே இருந்ததுடன் அத்தகையவாறு 1 றூட் மற்றும் 8.95 பேர்ச் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(iv) மேற்குறிப்பிட்ட கடனை அறவிடப்படாமையில் விளைவால், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியால் பெறவேண்டிய வட்டி வருமானம் மற்றும் முதல் என்பன ரூபா 185,400,000 ஆகும்.

(v) ரூபா 184 மில்லியன் பெறுமதியான மேற்குறிப்பிட்ட ஆதனத்தின் ஒரு பகுதி இலங்கை கடற்படையால் உடமையாக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 113 மில்லியன் பெறுமதியான ஆதனம் வங்கிக்கு சொந்தமாக உள்ளது. எவ்வாறாயினும், வங்கியால் பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், ரூபா 70.3 மில்லியன் மாத்திரமே இருந்ததுடன் அத்தகையவாறு ரூபா 9.7 மில்லியன் நட்டமொன்று வங்கியால் அடையப்பட்டிருந்தது.

(vi) ரூபா 18.8 மில்லியன் பெறுமதியான மேற்குறிப்பிட்ட காணிகளின் நான்கு துண்டுகள் 2009 யூன் 02 ஆந் திகதிய 1604/16 ஆம் இலக்க மற்றும் 2011 யூன் 02 ஆந் திகதிய 1708/24 ஆம் இலக்க அதிவிசேட வர்தமாணி அறிவித்தலை வெளியிடுவதன் மூலம் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டிருந்தது. இதுவரை அரசாங்கம் இது தொடர்பில் எந்தவொரு இழப்பீட்டு கொடுப்பனவும் செலுத்தவில்லை.

(ஈ) அடைவு முற்பணங்கள்

-------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. அடைவு முற்பணங்களின் சந்தைப் பெறுமதி 2013 ஆம் ஆண்டின் போது தங்கத்தின் சந்தை விலையின் தொடர்ச்சியான வீழ்ச்சி காரணமாக பெருமளவு வீழ்ச்சியடைந்திருந்தது.

ii. மீளாய்வாண்டின் போது மூன்று பொது ஏலங்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் ரூபா 3,995.4 மில்லியன் பெறுமதியான 52,354 மீட்கப்படாத

அடைவு நகைகள் ஏலத்திற்கு விடப்படாது வங்கியின் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தன.

iii. தங்க நகைகள் அடைவு பிடித்தல் தொடர்பில் 09 கிளைகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுச் செவ்வையில் ரூபா 22,124,812 தொகையான கொடுப்பனவுகள் தங்கத்தின் நியம விகிதத்தை விட குறைந்த விகிதத்தில் 68 சந்தர்ப்பங்களில் செய்யப்பட்டிருந்தன.

## 4.5 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியின் 24 கிளைகளில் தவறான பயன்பாடுத்தப்பட்ட நிதிகள் ரூபா 23,193,414 ஆக இருந்தது. அதில், 7 சதவீதம் 5 ஆண்டுகளிற்கு மேலான காலத்துடன் தொடர்புபட்டது. 01 ஆண்டினை விஞ்சிய மொத்த தொகை ஒட்டு மொத்த தவறாக பயன்படுத்திய தொகையின் 54 சதவீதமாக இருந்தது.

(ஆ) ரூபா 44,883,096 கிரயமான எட்டு கட்டிட பகுதிகள் எவ்வித நிர்மாணங்களும் இல்லாமல் நடைபெறும் வேலையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(இ) வங்கியானது 2013 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பின்வரும் இலக்குகளை அடைவதற்கு தவறியிருந்தது என அவதானிக்கப்பட்டது.

| விடயம் | இலக்கு | எய்தல் | எய்தப்படாமை |
|---|---|---|---|
| வைப்புக்களில் வளர்ச்சி | 14 சதவீதம் | 10 சதவீதம் | 4 சதவீதம் |
| மொத்த வைப்புக்கள் (ரூபா பில்) | 560 | 502 | 58 |
| சொத்துக்கள மீதான பெறுகைகள் (தடவைகளின் எண்ணிக்கை) | 1.8 | 0.18 | 1.62 |
| வரிக்கு முன்னரான இலாபம் (ரூபா. பில்) | 7.1 | 2.3 | 4.8 |
| ஒரு ஊழியருக்கான வைப்பு (ரூபா மில்) | 183 | 170 | 13 |

| | | | |
|---|---|---|---|
| ஒரு ஊழியருக்கான இலாபம் (ரூபா. மில்) | 2.32 | 0.8 | 1.52 |

## 4.6 மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட மோசடித்தன்மையான கொடுக்கல் வாங்கலிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| கிளை | கொடுக்கல் வாங்கலின் தன்மை | பெறுமதி | உள்ளக கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட நலிவுகள் |
|---|---|---|---|
| | | ரூபா. மில் | |
| பதுளை | (அ) போலி நகைகள் | 8.6 | i. உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட இரகசிய குறியீடுகளின் இரகசிய தன்மையை பாதுகாக்க தவறியமை.<br><br>ii. கிளைகளின் குறித்த உத்தியோகத்தரால் வாடிக்கையாளர் கையொப்பத்தின் உண்மைத்தன்மையினை மெய்மையாய்வு செய்யாமை<br><br>iii. நாளின் இறுதியில் முகாமையாளரால் அடைவு பிடிக்கப்பட்ட நகைகளின் பௌதீக மெய்மையாய்வு நளாந்தம் நடாத்தப் பட்டிருக்காமை.<br><br>iv. பாதுகாப்பு திறப்புக்களை வைத்திருந்த உத்தியோகத்தரகளால் பாதுகாப்பிற்கு அவர்களிற்கு அனுப்ப முன்னர் அடைவு பிடிக்கப்பட்ட நகைகளை மெய்மையாய்வு செய்ய தவறியமை.<br><br>v. அடைவு பிடிக்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | | | நகைளிற்காக முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்த வழக்கில் மூல ஆவணங்களை பெற முடியாமை |
| | (ஆ) நிலையான வைப்புக்களிற்கு எதிரான கடன்கள் | 8.7 | i. ஒரே உத்தியோகத்தர் ஊழியரிற்கு கணக்கு திறக்கின்ற மொத்த செயற்பாடுகளையும் கையாள்வதற்கு அனுமதித்தல் |
| | | | ii. நிலையான வைப்புக்கள் மீது வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பான ஆவணங்கள் மற்றும் உறுதிச்சீட்டுச்களில் நாளாந்த கணக்காய்வை மேற்கொள்ளத் தவறியமை. |
| | | | iii. நிலையான வைப்புச் சான்றிதழின் இருப்புப் பதிவேடு முறைப்படி பேணுவதற்கு தவறியமை மற்றும் நிலையான வைப்புச் சான்றிதழ் தொடர்பான இருப்பு கையாளுதல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு போதாமை |
| இரத்தினபுரி | (அ) இறந்த நபர்களிற்கு சொந்தமான நிலையான வைப்புக்களின் மோசடியான மீளெடுப்புக்கள் | 4.34 | i. விற்பனை புள்ளி இயந்திரத்தைப் (பிஓஎஸ்) பயன்படுத்தி அத்தகைய கணக்குகள் திறப்பதற்கு பாதுகாக்கப் பட்டிருந்த போதிலும் இந்த இயந்திரத்தின் ஊடாக ஊடாக புதிய கணக்கு திறக்க அனுமதித்தல். |
| | | | ii. பாடசாலையிலிருந்து விலகிய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்ந்த அலுவலக உதவியாளர் |

| | | |
|---|---|---|
| | | காசாளராக அனுமதிக்கப் பட்டிருந்தார். |
| (ஆ) மோசடியான காசு மீளெடுத்தல் | 0.51 | i. பொறுப்பான உத்தியோகத்தரால் நாளாந்தம் இறுதிக் கணக்குகளில் பதிவேடுகள் கணக்காய்வு செய்யப் பட்டிருக்கவில்லை.<br>ii. நிலையான வைப்புக் கணக்குகளை மூடும் நேரத்தில் நிலையான வைப்புச் சான்றிதழ்களை இரத்து செயற்வதற்கும் கோவையிடவும் இயலாதிருந்தது.<br>iii. வங்கியின் செயற்பாடுகளிற்கு ஒப்பந்த அடிப்படையில் அலுவலக உதவியாளரை பயன்படுத்துவதற்கு சேவை உடன்படிக்கையில் அனுமதிக்கப் பட்டிருக்காத போதிலும் இது அனுமதிக்கப்பட்டிருந்தது.<br>iv. பாதுகாப்பு மற்றும் முறையான மேற்பார்வையின் கீழ் பாஸ் புத்தக இருப்புக்களைப் பேணுவதற்கு தவறியமை. மேலும், பாஸ் புத்தக இருப்பு பதிவேடு நாளாந்தம் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.<br>v. கவனம் இல்லாமல் உத்தியோகத்தரால் வைப்புக்களை ஏற்றுக் கொள்ளவும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும் அனுமதித்தல் |

## 4.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கடற்படை 2009 சனவரி 29 இல் வங்கியால் சிற்றம்பலம் வீதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 35 மில்லியன் பெறுமதியான 0.479 ஹெட்டெயர் பரப்பளவுள்ள காணியை சுவீகரித்திருந்தது. காணியின் சுவீகரிப்பு இலங்கையின் சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமாணியில் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் இழப்பீட்டிற்கான பரிசோதனை 2012 யூன் 28 இல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கொழும்பு பிரதேச செயலகம் இழப்பீடு மற்றும் அவற்றின் மீதான வட்டி பரிசோதனை திகதியிலிருந்தான மதிப்பீட்டில் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதிவரை எந்தவித இழப்பீடும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வங்கிக்கான 18 மாடி கட்டிடமொன்றைக் கட்டுவதற்கு 2008 இலிருந்து ரூபா 35,228,367 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. இதுஉயர் பாதுகாப்பு வலயத்தின் கீழ் இந்தப் பகுதி வருகின்றதன் காரணமாக முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு நிர்மாணிப்பும் இல்லாமல் நடைபெறும் வேலையில் காட்டப்பட்டிருந்தது. ஆகவே அவற்றின் மீது ஏற்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாக அமைந்திருந்தது.

## 4.8 முதலீடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 55 விலைகூறப்பட்ட கம்பனிகளின் பங்குகளிலுள்ள ஒட்டுமொத்த முதலீட்டுக் கிரயம் ரூபா 7,950,328,654 ஆகும். அதில், 35.4 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 2,814,456,826 தொகை நீண்ட கால அடிப்படையில் 03 விலைகூறப்பட்ட கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. 55 விலைகூறப்பட்ட கம்பனிகளில் 49 கம்பனிகளின் பங்குகளின் சந்தைப்பெறுமதி 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,922,908,845 ஆல் பெறுமதியில் வீழ்ச்சியடைந்திருந்தது அதேநேரம் 6 கம்பனிகளின் பங்குகளின் சந்தைப் பெறுமதி மாத்திரம் ரூபா 220,049,608 ஆல் முன்னேற்றமடைந்திருந்தது. இதன்படி, முதலீடு செய்யப்பட்ட ஒட்டுமொத்த பங்குகளின் சந்தைப் பெறுமதி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,702,859,237 ஆல் குறைவடைந்திருந்தது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சந்தை பெறுமதி குறைவடைந்திருந்த கம்பனிகளின் முதலீட்டு கிரயம் ரூபா 5,593,802,836 ஆக இருந்தது.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,267,575,023 தொகையான 4 விலைகூறப்படாத மூலதன பிணையங்கள் உள்ளன. ரூபா 57,363,543 ஆன ஒரு மூலதன பிணையத்திலிருந்தான பங்கிலாப வருமானம் ரூபா 6,090,000 ஆகும். இதன்படி, 2013 இல் விலைகூறப்படாத மூலதன பிணையங்கள் மீதான பெறுகைகள் 0.48 சதவீதம் குறைவான பெறுமதியாக இருந்தது.

(இ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 மூலதன பிணையங்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 1,210,211,480 ஆன முதலீடுகள் தொடர்பில் 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் எவ்வித பெறுகைகளும் பெறவில்லை. அந்த முதலீடுகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,136,500,000 ஆன முதலீடுகளுக்கும் 2010 இல் எவ்வித பெறுகைகளும் பெறவில்லை.

(ஈ) மொத்த பிடித்துவைத்தல் காலத்திற்காகவும் (20 ஆண்டுகள்) ரூபா 10,000,000 ஆன முதலீடு நம்பிக்கை பொறுப்பு மூலதன நிதியத்தில் (பிரிவு நம்பிக்கைபொறுப்பு) மொத்த பெறுகைகள் வருடாந்தம் 3.85 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 7,550,307 மாத்திரமாக இருந்தது. கடந்த 21 ஆண்டுகளின் போது நிலையான வைப்புக்களிற்கு வங்கியால் செலுத்தப்பட்ட சராசரி வட்டி வீதம் வருடாந்தம் 11 சதவீதம் முதல் 13 சதவீமான வீச்சிலிருந்தன. வாடிக்கையாளர்களிற்கு செலுத்தப்பட்ட சராசரி வட்டி வீதங்களை கருத்திற்கொள்கையில், வங்கியானது ரூபா 14,033,589 முதல் ரூபா 17,959,068 நட்டமாக பிரிவு நம்பிக்கைப் பொறுப்பின் பெறுகையினை இழந்திருந்திருந்தது.

## 4.9 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியின் அனுமதிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வகுதி | அனுமதிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நிறைவேற்றுத் தரம் | 833 | 626 | 207 |
| மேற்பார்வைத் தரம் | 919 | 630 | 289 |
| நிறைவேற்றுத் தரமல்லாதோர் | 1,952 | 1,602 | 350 |
| சிற்றூழியர் | 52 | 50 | 02 |

| | | | |
|---|---|---|---|
| ஏனையவை (ஒப்பந்த அடிப்படை) | - | 34 | - |
| **மொத்தம்** | **3,756** | **2,942** | **848** |

மீளாய்வாண்டிற்காக வங்கியின் அனுமதிக்கப்பட்ட ஆளணி 3,756 ஆக இருந்ததுடன் வங்கியானது 2013 ஆம் ஆண்டின் போது நிறைவேற்று தரத்தில் 02 பதவிகள் மற்றும் நிறைவேற்றுத் தரமல்லாதோரில் 32 பதவிகள் என்பவற்றிக்கை கொண்ட 2,908 ஊழியர் நிரந்தர அடிப்படையிலும் 34 ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையிலும் ஈடுபடுத்தியிருந்தது. மேலும், 2013 திசெம்பர் 31 வரையும் 848 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட என்னுடைய விரிவான அறிக்கை மூலம் வங்கியின் தலைவியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீடு
(இ) கடன் நிர்வாகம்
(ஈ) பொருளிருப்பு கட்டுப்பாடு
(உ) ஆவணப்படுத்தல்
(ஊ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குதல்
(எ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஏ) வாடிக்கையாளர் கணக்குகளின் திறத்தலும் மூடுதலும்

*M*